**தும்பனை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து தும்பனை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி, உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் ரூபா 6,835,682 ஆக இருந்த போதிலும், அதனை ரூபா 6,822,150 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 13,532 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 9 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 18,304,322 தொகையாக இருந்ததுடன், அதில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,132,368 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,050,036 ஆன செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளில் ரூபா 15,924,293 கூட்டுப்பெறுமதியான நிர்மாண கடன்கொடுத்தோராக இருந்ததுடன், ஓராண்டிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,759,432 ஆக இருந்தது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதிகள் | |
| i 5(11) ஆம் விதி | சபையின் வழியில் காசு மற்றும் கட்டிடங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| ii 19 ஆம் விதி | சகல அடியிதழ் சேர் புத்தகங்கள் சபையின் செயலாளரிடம் பொறுப்பாளர் பொறுப்பில் காணப்பட வேண்டிய போதிலும் தலைமை எழுதுனரின் பொறுப்பில் காணப்பட்டன. |
| iii 207 ஆம் விதி | களஞ்சியப் பொருட்கள் வழங்கள் முடியுமான வரை பொதுப் போட்டியொன்றின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு புறம்பாக முறையற்ற விலை விபரங்கள் தயாரிக்கப்பட்டு ரூபா 76,150 ஆன கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| ii 218 ஆம் விதி | சபையின் சகல காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்றை மேற்கொண்டு அவற்றை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i நி.பி 110 | சபையின் வாகனங்கள் மற்றம் ஏனைய ஆதனங்களுக்கு சேதங்கள் இடம்பெற்றதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் உரிய சேதங்கள் பதிவேடுகளுக்கு உட்படுதப்பட்டிருக்க வில்லை. |
| ii நி.பி 371(2)(இ) | 2009 ஆம் ஆண்டு முதல் 2015 சனவரி வரையான காலப்பகுதிக்குரிய 6 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 923,289 தொகையான முற்பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii நி.பி 571(3) | 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய 17 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 259,020 ஆன வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) சுற்றறிக்கை

----------------

| | |
|---|---|
| i 2001 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 15/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | சபையின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் பதிவிற்காக நேரப் பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| ii 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | கலகெதர வர்த்தக தொகுதியின் 6 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,456,901 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,788,128 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,668,773 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 410,548 ஆக இருந்ததுடன், அதில் ஆண்டினுள் ரூபா 172,731 அறவிடப்பட்டிருந்தன. ஆண்டில் பட்டியல் இடப்பட்ட வருமானம் ரூபா 881,903 ஆக இருந்தது. அதில் ரூபா 675,623 அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது நிலுவையிலிருந்து பட்டியலிடல்களிலிருந்தும் அறவீடுகள் முறையே 42 சதவீதமாகவும் 76 சதவீதமாகவும் இருந்ததுடன், திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 444,097 ஆக இருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமநல சேவைகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 16,372 ஆன 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

**2.2.2 குத்தகை வாடகை**

**(அ) நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வர்த்தக தொகுதிகளின் கடைகளை குத்தகைக்கு வழங்கல்**

நிர்மாணிப்பதற்கு தேவையான திட்டங்களோ அல்லது மதிப்பீடோ தயாரிக்கப்படாமல் கலகொதர மடிகே வர்த்தக தொகுதி, ஹதரலியத்த பொது வியாபாரச் சந்தை மற்றும் அலுதெனிய பொது நூலகம் முன்னால் உள்ள 9 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு ரூபா 18,398 செலவு செய்து பத்திரிகையில் விளம்பரம் வெளியிடப்பட்டு கேள்வி கோரி3 கடைகளுக்கு கேள்விதார்கள் தெரிவுசெய்து வியாபார உரித்தை கையளிப்பதற்காக ஒரே தடவையில் கொடுப்பனவு கேள்விப் பணமாக இரண்டு குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 512,000 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) உடன்படிக்கைகள் கைச்சாத்திடாமல் கடைகளை குத்தகைக்கு வழங்கல்**

உடன்படிக்கைகள் கைச்சாத்திடாமல் 15 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

**(இ) நிலுவை கடை வாடகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 44 கடைககளிலிருந்து ரூபா 731,887 ஆன குத்தகை வாடகை 3 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டன.

**(ஈ) மூடி வைக்கப்பட்டிருந்த கடைகள்**

பிரதேச மக்களின் பொது பயன்பாட்டிற்கான சேவைகளை வழங்கும் நோக்கில் வியாபார கடைத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 5 வியாபாரத் தொகுதிகளில் 30 கடைகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மூடப்பட்டிருந்தன.

**(உ) ஹதரலியத்த பொது வியாபாரத் தொகுதியின் கடைகளை குத்தகைக்கு வழங்கல்**

முறையான மதிப்பிட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளாமல் 48 கடைகளின் வாடகை 2015 ஆம் ஆண்டின் போது வருமான பரிசோதகர்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அம்மதிப்பீடு வாடகை தொகையில் 50 சதவீதத்தை அறவிடுவதற்கு சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் புறம்பாக 2015 சனவரி 1 ஆந் திகதி 5 ஆண்டுகளுக்காக 50 சதவீத குத்தகை வாடகையை அறவிடுவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை நிதியத்திற்கு ரூபா 774,900 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

**2.2.3 ஏனைய வருமானம்**

**(அ) முச்சக்கர வண்டிக் கட்டணம்**

கலகெதர மற்றும் ஹதரலியத்த பிரதேசங்களில் பதிவுசெய்யப்பட்ட 525 முச்சக்கர வண்டிகளிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,089,835 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தன.

**(ஆ) நீர்க்கட்டணம்**

2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 612,065 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 397,651 ஆன மீதியொன்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(இ) கழிவுப் பொருள் வரி**

2 தனியார் நிறுவனங்களிடமிருந்து 2015 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் நிலவையாக இருந்த ரூபா 196,000 ஆன கழிவுப்பொருள் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சரத் அமுனுகம விளையாட்டரங்கின் விளையாட்டரங்குப் பொறுப்பாளர், உதவியாளர் மற்றும் காவலாளி என 3 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி சம்பளம், படிகளாகவும் நீர் வழங்கல் மற்றும் விளையாட்டரங்கு பராமரிப்பு என்பவற்றிற்காக ரூபா 1,408,796 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது விளையாட்டரங்கிலிருந்து ரூபா 234,000 மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபை நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,800,000 பெறுமதியான 6 செயற்திட்டங்களுக்காக ஆண்டின் இறுதியில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் அதில் 3 முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் ஒவ்வொரு ஆண்டிற்குரிய சுய வருமான உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து 30 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதத்தை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 20,497,248 ஆன மீண்டெழும் வருமானத்தை உழைத்திருந்த போதிலும், அதில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 509,142 தொகையான 5 சதவீதத்தை விட குறைந்த சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் என்பவற்றை ஒப்பிடும் போது 17 பேருக்கான மிகையும் 9 பேருக்கான பற்றாக்குறையும் காணப்பட்டன.

(ஆ) வீதி பதிவேடொன்று பேணப்பட்டுச் சென்றிருந்த போதிலும் அவ்வப்போது வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட வீதிகளை உள்ளடக்கி வீதி பதிவேடொன்று நாளதவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான அமுனுகம விளையாட்ரங்கு, கேட்போர்கூடம், JCB இயந்திரம் மற்றும் வீதி தகர்த்தி என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் 2016 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,188,300 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உப விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது 39 அத்துமீறிய நிர்மாணங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் 35 தொடர்பாக முதலாவது அறிவித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் மற்றும் 2008, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இடமாற்றம் பெற்றுச் சென்ற 6 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 176,694 ஆன ஊழியர் கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 முதல் 2016 வரையான காலப்பகுதியில் 407 கட்டிட விண்ணப்பங்கள் கிடைத்து அதில் 386 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 34 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்த மத்திய மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சிற்குரிய 301-5762 மோட்டார் வண்டி விபத்திற்குட்பட்டு மத்திய மாகாண இயந்திரப் பொறியியலாளர் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு ரூபா 173,120 ஆன மதிப்பீடொன்று 2015 யூன் 19 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திருத்தம் செய்யப்படாமல் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி மீண்டும் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இது தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காணப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹதரலியத்த பொது வியாபாரத் தொகுதியின் 28 ஆம் இலக்க கடையை குத்தகைக்கு வழங்குவதற்காக முன்னால் தலைவரின் நேரடி தொடர்பின் பேரில் கேள்வி கோரி ரூபா 3,875 ஆன மாதாந்த குத்தகை தொகைக்கு 5 ஆண்டு காலப்பகுதிக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் உடனபடிக்கை நிபந்தனைகளிலிருந்து விலகி கூடிய விலைக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையையும் சபைக்கு கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 29,185,519 பெறுமதியான 4 மோட்டார் வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத 3 மோட்டார் வாகனங்களும் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன.

(ஆ) சபை பேணிச் சென்றிருந்த நிலத்தில் பரப்பும் கல் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 124,319 பெறுமதியான உற்பத்தி இயந்திரமொன்றும் செயற்திட்ட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 8'x5' அளவிலான 6 கொங்கிரீட் தாங்கிகள் 2013 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்க எடுக்கப்படாமல் இயற்கை அழிவுகளுக்கு உட்பட இடமளிக்கப்பட்டிருந்தது.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கலகெதர பஸ் நிறுத்துமிடத்திற்கு முன்னால் உள்ள தனியார் காணியொன்றை கையேற்று அபிவிருத்தி செய்தல்**

கலகெதர பஸ் நிறுத்துமிடத்திற்கு முன்னால் 6 தரப்பினருக்கு உரித்தான தனியார் காணியொன்றை நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் கையேற்று நகர அபிவிருத்தியன் கீழ் பொதுச் சந்தையொன்றும்,முச்சக்கர வண்டி நிறுத்துமிடமொன்றும் உடற்பயிற்சி ஓடு பாதையொன்றும் நிர்மாணிப்பதற்கு 2013 பெப்ரவரி 26 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறித்த காணி உடமையாளரின் இணக்கப்பாடு மற்றும் எதிர்ப்பு என்பவற்றைக் கோராமல் முறையற்ற வகையில் காணியை கையேற்பதற்கு தீர்மானித்து உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி ரூபா 5,500,000 ஆன கடன் பெற்றுக்கொள்ளப்பட்டு அத்திகதியிலே நகர அபிவிருத்தி அதிகாரசபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த காணியை கையேற்காத காரணத்தினால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,068,932 ஆன வட்டி சபை நிதியத்திற்கு நட்டமொன்றாக இருந்தது.

**(ஆ) கலகெதர சுஜாதா மகளிர் வித்தியாலயத்திற்கு முன்னால் பொது வர்த்தக தொகுதியொன்றை நிர்மாணித்தல்**

-------------------------------------------------------------------------------------------------------------------------பொது வியாபார கடைத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 6,625,006 ஆன மதிப்பீடொன்று தயாரித்து நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக ரூபா 2,309,526 செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணம் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தினால் நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 2,500,000 தொகையொன்று நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக வட்டியாக ரூபா 389,779 தொகை செலுத்தப்பட்டிருந்தமை சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**3.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் முகாமை செய்யப்படாமல் 2 உழவு இயந்திரங்களில் கலகெதர, திக்ஒயவத்த / கிரீன்வுட்வத்த என்ற பெயருடைய கரியில் இடப்பட்டு வந்ததுடன் அதற்குரிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டின் போது அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெற்று முன்னுரிமை தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகர்களின் மதிப்பீட்டின் படி பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் 4 மூலதன விடயங்களுக்காக ரூபா 725,000 கூட்டுத்தொகையான அண்ணளவான மதிப்பீடொன்றை தயாரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடுகையில் 4 விடயங்களில் 21 சதவீதம் முதல் 68 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டில் ரூபா 69,763,763 ஆன மூலதனச் செலவினத்தை சபை செலவிட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டினை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

மீளாய்வாண்டிற்குரித்தான வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

---

மீளாய்வாண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு